1982 செப்டம்பர் 10]

விளவங்கோடு தாலூகா கடலோரப் பகுதிகளில் கடலரிப்பைத் தடுக்க மேற்கொண்ட நடவடிக்கைகள்

* வினா எண் 58—திரு. டி. மணி: மாண்புமிகு கதர் மற்றும் பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம் விளவங்கோடு தாலூகாவில் நீரோடி, பூத்துறை, எரேமியன்துறை போன்ற கடலோரப் பகுதிகளில் கடலரிப்பைத் தடுக்க மீனவர்களின் குடியிருப்புகளை பாதுகாக்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

(ஆ) பாதுகாப்பு நடவடிக்கையின் காரணமாக மீனவர்களின் மீன்பிடி தொழில் பாதிக்கப்பட்டுள்ளதாக ஏதேனும் புகார் வந்துள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: (அ) கன்னியாகுமரி மாவட்டம் விளவங்கோடு தாலூகாவில் நீரோடியில் கடலரிப்பு தடுப்புச்சுவர் கட்ட அரசு, ஆணை எண் 909, பொதுப் பணித்துறை, நாள் 2—5—80-ல் ரூ. 16.50 இலட்சத்திற்கு அனுமதி அளித்திருக்கிறது. நீரோடியில வேலை 1981 ஆம ஆண்டு பிப்ரவரியில் துவங்கப்பெற்று 65 சதவீதம் வேலை முடிவு பெற்று விட்டது. மீதி வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

(ஆ) ஆம். கன்னியாகுமரி மாவட்டத்தில் பொழிக்கரை, கேசவன்புத்தன்துறை, பெரியகாடு, மேல்மணக்குடி, கோவளம் முதலிய இடங்களில் தடுப்புச் சுவர் கட்டுவதால் மீனவர்களின் மீன் பிடிப்புத் தொழிலுக்கு இடையூறாக இருப்பதாக மீனவர்கள் எதிர்ப்பு தெரிவித்திருக்கிறார்கள்.

திரு. டி. மணி: பேரவைத் தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் இந்தக் கடலரிப்பைத் தடுப்பதற்காக நீரோடி என்னும் பகுதியில் தடுப்புச் சுவர் கட்டும் வேலை நடைபெற்றுக் கொண்டிருப்பதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள்: ஆனால் அங்கே கட்டப்படுவது தடுப்புச் சுவர் அல்ல. கடற்கரையில் 20 அடி, 30 அடி அகலத்திலே மண்ணிலே கல்லைப் புதைக்கின்ற வேலைதான் நடக்கிறது. இதனால் அலைகள் அதிகமாக வருகின்ற நேரத்தில் நாட்டுப் படகு வைத்திருக்கும் மீன்பிடித் தொழிலாளர்கள் கடலிலே படகுகளைத் தள்ள முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. இந்தச் சூழ்நிலையை மாற்றியமைப்பதற்காக, மீனவர் குடியிருப்புகளோடு சேர்த்து பத்தடி அகலத்தில் தடுப்புச் சுவர் கட்டுவதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தடுப்புச் சுவர் கட்டுவதற்கு முன்பாக அந்தக் கடலோரப் பகுதியில் ரேண்டம் ரூபிள்ஸ் போட்டுத்தான் சுவர் கட்டுவார்கள். மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னதைக் கவனத்தில் கொண்டு பரிசீலித்து ஆவன செய்யப்படும்.

திரு. டி. மணி: பேரவைத் தலைவரவர்களே, இதுபோன்று 1981 ஆரம்ப காலத்திலே பூத்தரை என்னும் பகுதியில் இரணியன் துறை கடற்கரையில் இருக்கின்ற ஒரு மாதா கோவில் வரையிலும் கடலரிப்பினால் குந்தகம் ஏற்பட்டிருக்கிறது. அது மட்டுமல்லாமல், நூற்றுக்கும் அதிகமான வீடுகள் இந்தக் கடலரிப்பினால் பாதிக்கப்பட்டு, மீனவத் தொழிலாளர்கள் வீடிழந்திருக்கிறார்கள். அந்தப் பகுதியில்கூட இந்த நிதியாண்டில் கடலரிப்பைத் தடுத்து அவர்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அரசு பரிசீலிக்கும்.

(முற்பகல் 10.00)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

தமிழகத்தில் முதியோர் உதவித் தொகை மூலம் பயன் பெறுவோர் எண்ணிக்கை.

*வினா எண் 59— திரு. வேடச்சந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1981 டிசம்பர் இறுதியில் தமிழகத்தில் ''முதியோர் உதவித் தொகை பெறுவோர் எண்ணிக்கை எவ்வளவு ?

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS